உ

சிவமயம்



யாழ்ப்பாணம் உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும்
சென்னை வளசரவாக்கத்தை வதிவிடமாகவும்
கொண்டு வாழ்வாங்கு வாழ்ந்து
வையத்தை நீத்த

# அமரர் வல்லிபுரம் இளம்பூரணம்

அவர்களின்
சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

## 02-01-2006

உ

சிவமயம்



# அமரர் வல்லிபுரம் இளம்பூரணம்

அவர்கள்

தாயின் மடியில்
**19-09-1921**

இறைவன் அடியில்
**03-12-2005**

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் – வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."

உ

சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் துதி

மங்களத்து நாயகனே மண்ணாளும் முதலிறைவா
பொங்குதன வயிற்றோனே பொற்புடைய ரத்தினனே
சங்கரனார் தருமதிலாய் சங்கடத்தை சங்கரிக்கும்
எங்கள் குலவிடி விளக்கே எழில் மணியே கணபதியே !

## தேவாரம்

திருவேயென் செல்வமே தேனே வானோர் செழுஞ்
சுடரே செழுசுடர் நற்சோமிமிக்க
உருவேயென் உறவேஎன் உளனே ஊனின்
உள்ளமே உள்ளத்தினுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்லினை நோய் அடையாவண்ணம்
ஆடுவடு தண் துறை உறையும் அமரரேறே.

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிருபொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யும்சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்டகன கத்திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுர்க்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டுநான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும் போதுஉன்
அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற் குருவாகி
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே.

## வாழ்த்து

சிவனடியே சிந்திக்கும் சிவனடியார் பதம் வாழ்க
பவமது நீங்க மேலாம் பரனருள் வேண்டித்
தவமது புரிந்து மற்றும் தரணியிலுள்ளோர் எல்லாம்
சிவநெறி வழியே நின்று சீருடன் நீடு வாழ்க.

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்

# எம் விழிநீர் நிறைந்த காணிக்கை !

எமது இல்லத்துப்
பெருந்தலைவர்
இதயத் தெய்வம்
அமரர் வல்லிபுரம் இளம்பூரணம்
அவர்கள் நினைவாக வெளியிடப்படும்
இந்த நினைவு மலரை
இறைவன் திருப்பாதங்களில் சமர்ப்பித்து
அவர்தம் தூய ஆத்மா
நித்திய ஆத்ம சாந்தி பெறவேண்டும்
என இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அமரர் தம் பாதங்களில்
"எம் விழிநீர் நிறைந்த காணிக்கை"

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

இங்ஙனம் குடும்பத்தவர்கள்

இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

– பெரிய புராணம்

உ
சிவமயம்

# எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு எம்மை விட்டுப் பிரிந்த உயர்திரு

# வல்லிபுரம் இளம்பூரணம்

## அவர்களின் நினைவுச் சுவடுகள்

எழுகடல் மாது அலைக்கரம் கூப்பித் தொழுது வணங்கும் எம் எழில் திருநாடாம் இலங்கையின் சிரமென இலங்கும் நற்பதி எனப்போற்றுவதும் செந்தமிழும் சைவமும் செழித்தோங்கி, தென்றலும் செந்தமிழில் தெம்மாங்கு பாடும் திங்களும் தீந்தமிழர் மொழியமுதை சுவை கொள்ளும் பைந் தமிழர் பண்பாட்டின் பகர்வுகளாய் பண்புகொள் நற்செய்திறன்களது கோலங்கொண்டு பரிணமிக்கும் யாழ்ப்பாணம் என்னும் நற்பதியில் இயற்கை அன்னை எழில் ததும்ப ஈன்றெடுத்த "உடுப்பிட்டி" என்னும் புனித பதியில் உயர் குடித்தோன்றல்கள் திருவாளர் வல்லிபுரம் அவர்களும் இல்வாழ்வில் பெருமை காண துணை சேர்ந்த பெண் மயிலாள் சின்னாச்சிப்பிள்ளையும் இணைந்த இல்லறத்தின் புலர்வு இரத்தினக் கோர்வையில் ஐந்தாவது நற்குண புத்திரனாக உதித்தவர்தான் "இளம்பூரணம்" என்று அனைவராலும் அன்பாக அழைக்கப்பெற்ற சான்றோன் ஆவர்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற குறளுக்கு இலக்கணம் கூற – பெருமை கூட்ட 1921ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 19ஆம் திகதி அன்று பிறந்தார். இளம்பூரணம் அவர்கள் கற்ற பாடசாலையிலும் சரி, உற்றார் உறவினர்கள், ஊர்மக்கள், அயலவர் என அனைவரிடத்திலும் அவரது நற்குணத்தின் காரணமாக நன்மதிப்பைப் பெற்று வந்தார். அமரர் செல்லக்கண்டு, அமரர் நல்லம்மா, செல்லம்மா, கந்தசாமி, அமரர் செல்லையா, அமரர் தங்கம்மா ஆகியோர் இவரது அன்பு உடன்பிறப்புக்களாவர்.

இவர் தனது விவசாயத் தொழிலில் நல்ல முறையிலும் சிறந்த உழைப்பாளியாகவும் விளங்கி அத்தொழிலை மிகவும் சிறந்த முறையில் செய்து வந்தார்.

1949 ஆம் ஆண்டு இவரது 28வது வயதில் அதே ஊரான உடுப்பிட்டியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை – அன்னப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியாகிய செல்லாச்சி என்னும் நங்கை நல்லாளை மணமகளாகத் தேர்ந்தெடுத்து திருமணம் செய்து வைத்தனர். இளம்பூரணம் – செல்லாச்சி தம்பதிகளின் இல்லற வாழ்க்கை பெரியோர்களின் ஆசியுடன் அமைதியாக ஓடியது.

"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட் பேறு அல்ல பிற"

என்ற குறளின் பொருளுக்கமைய ஒன்பது பிள்ளைகளைக் கண்மணிகளாகப் பெற்றெடுத்து மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தார். அவர்களில் மூவர் ஆண் மகவுகள். பெண் மகவுகள் ஆறுபேர் ஆவர். அவர்கள் முறையே குணராசா, தேவராசா, தேவராணி, சிறீராசா, குணராணி, சிறிசெல்வராணி, புஸ்பராணி, வசந்தராணி, இன்பராணி ஆகியோர் ஆவர். இவர்களின் பாசமுள்ள தந்தையாக விளங்கி அவர்களின் கல்வி முன்னேற்றத்திலும் அவர்களின் வாழ்வின் முன்னேற்றத்திலுமே தன்வாழ்நாளை அர்ப்பணித்தார்.

அத்துடன் முறையே சசிகலா, துளசிமலர், வீரசிங்கம், கருணகுலவதி, ஜெகதீஸ்வரன், வைத்தீஸ்வரன், நவஜீவயோகன், கிருபாகரன், சுகிதரன் ஆகியோரை அன்பு மருமகளாகப் பெற்று அவர்கள் அனைவருடனும் அன்புடனும் பண்புடனும் பழகும் நல்ல ஒரு மாமனாக விளங்கினார். பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் இரண்டு வருடங்கள் சந்தோஷமாக இருந்து 2001ஆம் ஆண்டு பங்கனி மாதம் இந்தியாவில் உள்ள பிள்ளைகளிடம் சென்றார்.

"செய்யும் கடமைகள் யாவும் சரிவரச் செய்ய வேண்டும். செய்வதை எல்லாம் முறையாக்ச் செய்தால் ஏன் கோயிலுக்குச் சென்று வழிபடல் வேண்டும்" என்ற மனத்திடத்துடன் வாழ்ந்தவர். எதையும் சரியாகவும் ஒழுங்காகவும் செய்ய வேண்டும் என்ற நல்ல பண்பே இவரை இறுதிவரையும் நல்ல மனிதராக வாழ வைத்தது. அத்துடன் வாழ்க்கையில் கஷ்டப்படுபவர்களுக்கு உதவவேண்டும், அவர்களின் துயர் துடைக்க வேண்டும் என்ற நல்ல நோக்கம் அவரின் வாழ்வில் முக்கிய இடம் பெற்றிருந்தது.

இவர் அன்புக் கணவனாக – அன்புத் தந்தையாக – பாசமும் பற்றும் நிறைந்த மாமாவாக – பாசமுள்ள சகோதரனாக – நேசம் நிறைந்த பேரனாக அன்பு, அடக்கம், பண்பு, சத்தியம், ஆகிய பண்புகளோடு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, ஆகியவற்றை வாழ்விலே உயிராகக் கொண்டு வாழ்ந்தவர். வாழ்வில் தனது 84வது வயதினிலே நெஞ்சை விட்டகலாத துயர்தனை அனைவர்க்கும் கொடுத்து "பூமியில் பிறந்தவர் அனைவரும் ஒருநாள் இறைவன் திருவடியை அடைதல்" என்ற நியதிப்படி 2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ஆம் திகதி எல்லாம் வல்ல இறைவனடி சேர்ந்தார். எது எப்படியானாலும் இறைவிருப்பு எப்படியோ அப்படித்தான் எமது வாழ்க்கையின் முடிவும் என்பதில் ஐயமில்லை. கவியரசர் தத்துவ ரீதியாகக் கூறி வைத்துச் சென்றதாவது. "எல்லாப் பதவிகளுக்கும் போட்டி போடும் மனிதன் 'சிவபதவி' எனும் பதவிக்குப் போட்டி போட விரும்ப மாட்டான். அவன் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் அவன் அடைய வேண்டிய பதவி அதுவொன்றே"

மரணம் என்பது பிறந்த உயிர்கள் அனைத்திற்கும் பொதுவான நியதி என்பதையும் "ஒரு வீட்டில் குடியிருக்கும் குடியிருப்பாளன் வீடு குடியிருக்க ஏற்றதாக இல்லாதபோது அவ்வீட்டைவிட்டு வேறு வீட்டிற்குச் செல்வதுபோல, நோய் பிணியினால் இவ்வுடம்பு பீடிக்கப்படும்போது இவ்வுடலில் குடியிருக்கும் ஆன்மா இவ்வீட்டைவிட்டு பறந்து செல்வதுபோல நைந்துபோன சட்டையாக கழற்றி எறிந்துவிட்டு இந்த ஆன்மா புத்தம் புதிய சட்டையாக புதிய பிறவிகளில் தன்னை இணைத்துக் கொள்கின்றது" என்கின்ற கீதையின் வாக்கியத்தை நெஞ்சில் நிலையாக நிறுத்தி அவ்வகையில் நாமும் எம் மனதைத் தேற்றிக் கொண்டு அன்னார் தம் ஆத்மா இறையடியில் நித்திய சாந்தி அடையப் பிரார்த்திப்பதென்றே அவர் தமக்கு நாம் செய்யக் கூடிய நன்றிக் கடனாகும். இன்றைய தினத்தில் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து அவரது ஆன்மா சாந்தியடைய வேண்டுவோமாக !

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

## மனைவி புலம்பல்

மன்னவனே ! என்னவனே ! மாந்தருள் மாணிக்கமே!
மாலையிட்ட நாள் முதலாய் சொன்ன சொல் தட்டவில்லை
மண்ணில் சொற்ப நேரம் பிரிந்ததில்லை
கண்மணிபோல் எனைக் காத்து காலமெலாம் வாழ வைத்தீர்
கனவாய் காற்றில் கடுந்தூரம் பறந்ததென்ன !
நாம் பெற்ற செல்வங்கள் 'ஐயா' எனக்கூவி
எம் ஐயா எங்கே எங்கே எனத் துடிக்கின்றார்
என்ன பதில் சொல்வேன் ஐயா !
தஞ்சமே நீர் என்று தரணியில் வாழ்ந்தேன் ஐயா
அஞ்சிய நடையுடனே அரவணைக்க யாருமின்றி
பிஞ்சு மனப் பிள்ளைகளுடனே வாழ்ந்திடவே நேர்ந்ததுவே
அந்தோ கண்மணிகாள் ! எனக் கட்டி அனைத்து
முத்தமிட நீங்கள் மீண்டும் வந்து உதிப்பதெந்நாளோ?

## பிள்ளைகள் புலம்பல்

அள்ளியணைத் தெம்மை அங்கங்கள் நோகாமல்
அரவணைத்து உணவூட்டி வளர்த்தவெம் தெய்வமே
உள்ளத்தில் எம்முயர்வை உணர்த்தி வளர்த்தவரே
உற்றவெம் ஐயாவை எங்கிருந்து காண்போமையோ
கள்ளமிலா நன்மனத்தோய் கலங்கவைத்துச் சென்றீரையா
காலன் செய்சதியோ கண்கண்ட எம்தெய்வமையா
துள்ளும் வயதிலுமெமை அடித்தறியா ஐயாவே
சற்குணவாளன் எமதையா எங்குற்றீர் ஐயையோ.

## மருமக்கள் புலம்பல்

மண்கண்ட மானிடரில் மதிக்கவுள்ள மாமாவே
மாசறியா மாமகனே மாண்புறு தெய்வமே
பண்கொண்ட நன்மொழியும் பாசமுறு நற்செயலும்
பாரினிலே இனியென்று அறிவோமே மேன்மகனே
கண்கண்ட பெரியவனே கருதரிய மாமாவே
கண்ணினிய எம்பிரிய கற்பகமே போனதெங்கே?
விண்கொண்ட தெய்வங்கள் விரும்பி அழைத்தனரோ!
வேதனையில் ஆழ்த்திவிட்டுப் போனீரோ ஐயையோ.

## சகோதரர்கள் புலம்பல்

கருதரிய எம்மினிய கற்பகமே சகோதரனே!
கனிவுடனே எந்நாளும் சேர்ந்து பழகுவீரா!
மருவினிய எம்சகோதரனே மாமகனே காண்பதெப்போ?
மலர்முகத்தைக் காட்டாமல் மறைந்தெங்கு சென்றீரோ?
அருமையுறு சகோதரனே அன்பிற்கு இலக்கணமே!
ஆதரவாய் எமையெல்லாம் அணைத்து வாழ்ந்தவரே!

திருமகனே எங்கு சென்றீர்? தேவனே என்செய்வோம்?
சிந்தை கலங்குதையா தெய்வமே ஆறுதல்தா.

## மைத்துனர் மைத்துனிமார் புலம்பல்

உற்றஎம் மைத்துனரே உயர்குண நன்மகனே
கற்றவரும் மற்றவரும் கருதிடவே வாழ்ந்தவரே
பற்றுள்ள எம்மையெலாம் தரணியிலே தவிக்கவிட்டு
கொற்றவனே எங்குற்றீர் குலவிளக்கு அணைந்ததையோ.

## பெறாமக்கள் புலம்பல்

பற்றுடன் பாசந்தந்து பண்புடன் பழகும் பண்பு
உற்றவெம் உயர்துணையே ஒப்பிலா உத்தமனே
கற்றோரும் மற்றோரும் கனம்பண்ண வாழ்ந்தவரே
வற்றாத அன்புடைய வள்ளலே காண்பதெப்போ?

## பேரப் பிள்ளைகள் புலம்பல்

அன்புடன் பாசந்தந்து அரவணைத்த தாத்தாவே
பண்புடன் பட்சணங்கள் பகிர்ந்துதரு தாத்தாவே
உன்தூக்கல் எங்களுக்கு உயர்வுதந்து காத்ததையா
சென்றவெம் தாத்தாவைக் காண்பதினி எந்நாளோ?

## உற்றாரும் மற்றாரும் புலம்பல்

செம்மனத்தான் தண்ணளியான் செஞ்சொல்லான் செகமறிந்த
சீர்பூத்த உடுப்பிட்டிதந்து மேன்மகனே எங்குற்றாய்
எம்மவரின் குலங்காத்த ஏந்தலே உத்தமனே
ஏங்கவெமை வைத்துவிட்டு எங்குற்றீர் நன்மகனே
தம்மவர்போல் யாவரையும் கண்ணியமாய் மதிப்பவரே
தக்கதருணமதில் ஆய்வின்றி தூயவனை
அம்பென வந்தகாலன் ஆய்வின்றி தூயவனை
அழித்தானே என்செய்வோம்! ஆறிடோம் ஆறிடோமே.

உறவினர் எம்மைக் கண்டால் இன்முகம் மலர்வாய்
உரிமையுடன் அன்பு அறிவுரைகள் பல பகர்வாய்
உன் அன்புள்ளம் மகிழ உபசரிப்பாய் அன்புடனே
உன் பாச உணர்வு எமை ஆழ்த்தும் வேதனையில்!

உ

சிவமயம்

# ஸ்ரீ கணபதி மந்திரம்

மூஷிக வாகன மோதக கஸ்த
சாமர கர்ண விலம்பித சூத்ர
வாமனரூப் மகேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே

கஜானனம் பூதகணாதி சேவிதம்
கபித்த ஜம்பூபல சாரபக்ஷிதம்
உமா சுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்
அகஜா்னன பத்மார்க்கம் கஜானன மகர்நிஷம்
அநேகதந்தம் பக்தானாம் ஏகந்தம் உபாஸ்மகே.

## விக்னேஸ்வரர் அர்ச்சனை

### த்யானம்

மூஷிக வாகன மோதக ஹஸ்தா
சாமர கர்ணா விலம்பித சூத்ரா
வாமன ரூபா மஹேஸ்வர புத்ரா
விக்ன விநாயக பாத நமஸ்தே.

| | | |
|---|---|---|
| ஓம் | சுமுகாய | நம : |
| ஓம் | ஏகதந்தாய | நம : |
| ஓம் | கபிலாய | நம : |
| ஓம் | கஜகர்ணகாய | நம : |
| ஓம் | லம்போதராய | நம : |
| ஓம் | விகடாய | நம : |
| ஓம் | விக்னராஜாய | நம : |
| ஓம் | விநாயகாய | நம : |
| ஓம் | தூமகேதவே | நம : |
| ஓம் | கணாத்யக்ஷாய | நம : |
| ஓம் | பாலச்சந்த்ராய | நம : |
| ஓம் | கஜானனாய | நம : |
| ஓம் | வக்ரதுண்டாய | நம : |
| ஓம் | சூர்ப்பகர்ணாய | நம : |
| ஓம் | ஹேரம்பாய | நம : |
| ஓம் | ஸ்கந்தபூர்வஜாய | நம : |

உ

தேவி துணை

# கௌரி காப்பு



## விநாயகர் துதி

முன்னின்று செய்யுன் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மோடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற்கா.

காப்பெடுக்க வந்தேனே கௌரிம்மன் தாயிரே
காத்தென்னை தோற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெலாம் நின்னரிய காப்பெடுடிதே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
உண்ணும் உணவாக உயிரினும் உயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும்கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்கு தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறுபோட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்

சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவனே அன்றுநீ நோன்பிருந்தா"
விரதத்தை கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பை புனைத்துவிடு காலபயம் ஒட்டிவிடு
நூலைப் புனைத்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பை அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நற்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பை அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீருசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கும் வித்தகளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடும் ஏந்துபுகழ் தேவியளே

காப்பெனக்கு போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாங்கள் கேட்பதெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனைச் சார்ந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றும் இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகிறேன்
காப்பெனக்கு கையிலுண்டு கடமைகளை செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுயும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருக கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்க்ளெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர

தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

# வம்சாவழி

அமரத்துவ தம்பதிகள்
வல்லிபுரம் + சின்னாச்சிப்பிள்ளை

அமரர் செல்லக்கண்டு
அமரர் நல்லம்மா
செல்லம்மா
கந்தசாமி
**இளம்பூரணம்**
அமரர் செல்லையா
அமரர் தங்கம்மா

அமரத்துவ தம்பதிகள்
வேலுப்பிள்ளை + அன்னப்பிள்ளை

செல்லாச்சி
நவரத்தினம்
அமரர் இராசரத்தினம்
பூமணி
இரத்தினம்மா

இளம்பூரணம் ⟷ செல்லாச்சி

- குணராசா + சசிகலா
  - மிருணன்
  - கீர்த்திகா
  - ஜீவிதன்
- தேவராசா + துளசிமலர்
  - கிருஸ்ணராஜா
  - உதயரஞ்சன்
  - அருள்ராசா
  - அனோஜன்
- தேவரணி + வீரங்கம்
  - தர்சினி
- சிறீராசா + கருணகுலவதி
  - கோமளன்
- குணராணி + ஜெகதீஸ்வரன்
  - கிஷானி
  - விபீஷன்
- சிறீசெல்வராணி + வைத்தீஸ்வரன்
  - மதிபூரணன்
- புஸ்பராணி + நவஜீவயோகன்
  - விஜித்திரன்
  - தர்சிகன்
  - சுதர்சிகன்
- வசந்தராணி + கிருபாகரன்
  - சௌமியா
  - சாயீசன்
- இன்பராணி + சுகிதரன்
  - வர்சினி

## நன்றி நவிலல்

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய்த் திகழ்ந்து
எம்மை விட்டுப் பிரிந்து இறைபதம் எய்திய
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு

## அமரர் வல்லிபுரம் இளம்பூரணம்

அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து எங்கள் இல்லங்களுக்கு நேரில் வந்து அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், தொலைபேசி மூலம் எமக்கு ஆறுதல் கூறி எமது துக்கத்தில் பங்கு கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும்,

மலர்வளையம் சாத்தியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகளை வெளியிட்டவர்களுக்கும், நினைவுகளைமீட்டி உரைகள் தந்தோருக்கும்,


இறுதிக்கிரியைகள், அந்தியேட்டி முதலியவற்றில் கலந்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தனை புரிந்தவர்களுக்கும்,

தேவையானபோதெல்லாம் உதவி ஒத்தாசைகள் புரிந்த அனைவர்க்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளையும், வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தவர்கள்

**We are greatful to all our relatives and friends who personally came and shared our sorrow. We also extend our thanks to all those who shared our sorrow by sending condolence messages and phone calls. We are greatful to all those who sent wreaths and participated in the funeral rites.**

**Thank You**



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய், எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகி விடும்!

"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"

– பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.